**பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு**

**திருவழிபாடு ஆண்டு - C**

**2025-05-04**

*(இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம். 5:27-32, 40-41,*

*பதிலுரைப்பாடல். திபா. 30: 1,3-05, 10-12. ,*

*திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம். 5:11-14 ,*

*யோவான் எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்: 21: 1-19 )*

**திருப்பலி முன்னுரை**

*உண்மைக்குரியவர்களே, உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால், பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். இயேசுவின் உயிர்ப்பை முழுமையாக ஏற்று, உண்மையான இறைமகனாகிய அவரைப் பின்தொடர இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்து இயேசு தம் சீடர்களுக்கு திபேரியக் கடல் அருகே தோன்றியபோது, சீடர்கள் அவரில் சந்தேகம் கொள்ளவில்லை. ஏனெனில், அவர் ஆண்டவர்தாம் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்களைப் போன்று, ஆண்டவரின் உயிர்ப்புக்கு உண்மையான சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்படுகிறோம். பேதுருவைப் போன்று இயேசுவின் மீதான அன்பை வெளிப்படுத்த மீண்டும் நமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தைப் பெற்று, நாமும் உயிர்ப்பின் மக்களாக வாழ வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பான ஆண்டவரே

எமது திருஅவையின் தலைவர்களுக்கு மட்டில்லாத இறைஞானத்தை, வல்லமையைத் தாரும். இவர்களின் இறை ஆவியைத் தூண்டியருளும் பிழையிலா உள்ளத்துடன் இவர்கள் இயேசுவிற்கே கீழ்ப்படிந்து இறையரசை அமைத்திட அருள்புரிய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

இறைவா எம் தந்தையே,

'உயிர்த்த கிறிஸ்துவே, அனைத்தையும் படைத்தவர்' என்பதை நாங்கள் அறிந்து கொள்ளவும், அவரை அறிந்து அவரை அறிவிப்பதே யாம் பெற்ற பெரும்பேறு என்பதனை உணரத் தலைப்படவும் எமக்கு வரம் அருள இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

வழிகாட்டும் இறைவா!

எம் நாட்டுத் தலைவர்கள் சுயம் மறந்து, பிறர்வாழத் தம்மையே தந்திட்ட இயேசுவைத் தம் மேல்வரிச் சட்டமாக்கிடவும், அவரில் தம்மையும், தம் ஆட்சி சார்ந்த அனைவரையும் புதுப்பித்திட வரம் தர இறைவா! உம்மை வேண்டுகிறோம்.

இறைவா!

எம் தந்தையே! இயேசு இறைவனை நாங்கள் அனைத்தையும் விட அனைவரையும் விட அதிகமாக அன்பு செய்து, அவர் சார்ந்த அனைத்தையும் அவரில் கட்டியெழுப்பிட வரம் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

பேரின்பமே இறைவா!

அகில உலக இளையோருக்காக உம்மை மன்றாடுகிறோம். இவர்களில் எத்தனையோ பேர் இறைமகனை ஏற்காது, அழிந்து போகும் மாந்தரைத் தம் மீட்பர்களாகக் கண்டிடும் அவலம் நீங்கி, இறைமகனில் இனிமையைக் கண்டுணர வரம் தர இறைவா, உம்மையே வேண்டுகிறோம்.

இரக்கம் காட்டுபவராம் இறைவா,

எம்மை குணப்படுத்துவதற்காக காயப்பட்ட இயேசுவின் பாடுகள் வழியாக, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணப்படுத்தி புது வாழ்வு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

மேன்மைமிகு அரசராம் இறைவா,

பிற சமயத்தினரின் அவமதிப்புகளை பொருட்படுத்தாமல், உலகெங்கும் வாழும் மக் களுக்கு உம் திருமகனது உயிர்ப்பின் நற்செய்தியைக் கொண்டு சேர்க்கும் கருவிகளாக கிறிஸ்தவர்கள் அனைவரையும் உருமாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.